# BHARATHIAR UNIVERSITY

STATE ELIGIBILITY TEST (SET) FOR LECTURESHIP

Code No. : **27**

**Subject : TAMIL**

## புதிய பாடதிட்டமும் விளக்கக் குறிப்புகளும்

குறிபபு:

இப்பாடத்திட்டம் தாள் II & தாள் III ( பகுதி அ & ஆ) என இரு பிரிவுகளாக அமையும். தாள் II ல் 50 விடை தெரி வினாக்கள் ( Multiple Choice Questions) பல்வேறு வகையானவற்றைக் கொண்டிருக்கும். இப்பகுதியின் மதிப்பெண் 100 ஆகும். தாள் III இரண்டு பிரிவுகள் - அ & ஆ - என அமையும். தாள் III (அ) பகுதியில் 10 குறு விடை வினாக்கள் (300 வார்த்தைகள்) கொண்டதாகவும், ஒவ்வொரு வினாவும் 16 மதிப்பெண்கள் பெறுவதாகவும் அமையும். இதில் ஒவ்வொரு வினாவும் 'அல்லது அல்லது ' அமைப்பில் அமையும். (மொத்த மதிப்பெண்கள் 160 ஆகும்). தாள் -III பகுதி ஆ கட்டாயமாக நான்கு அருந்துணைப் பாடங்களில் ஏதேனும் ஓர் அருந்துணைப் பாடத்திற்கு மட்டுமே மாணவர்கள் விடை எழுத வேண்டும் (800 சொற்கள்) இவ் வினா விடை 40 மதிப்பெண்கள் கொண்டதாக அமையும். மொத்த மதிப்பெண்கள், தாள் IIIக்கு 200 ஆகும்.

## தாள்-II விடைதெரி வினாப் பாடதிட்டம்

### பாடப்பொருள்

1. சங்ககாலம் தொடங்கி 20ஆம் நூற்றாண்டு வரை வளர்ந்துள்ள தமிழ் இலக்கிய வரலாற்றுப் பகுதிகள்

2. சம கால எழுத்தாளர்கள், படைப்புகள்

   2.1 இக்காலப் படைப்பிலக்கியத்தில் புகழ் பெற்ற ஆசிரியர்கள்

2.2 இக்காலப் புகழ் பெற்ற படைப்புகள்:
கவிதை, சிறுகதை, நாவல், நாடகம், கட்டுரை

3. ஊடகங்களின் பங்களிப்பு :
திரைப்படம், தொலைக்காட்சி, செய்தித் தாள்கள், இதழ்கள் வானொலி, இணையம்.

4. ஊடகங்கள்,படைப்புகள்ஆகியவை தனி மனிதன் மீதும், குடும்பத்தின் மீதும், சமுதாயத்தின் மீதும் பண்பாட்டு - அடிப்படையில் செலுத்தும் செல்வாக்கு.

## தாள்-III (பகுதி-அ)
## (அடிப்படைப் பாடங்கள்)

பகுதி- I : தமிழ் இலக்கியங்கள்:

1.1 பழந்தமிழ்

1.1.1 பத்துப்பாட்டு, எட்டுத்தொகை

பகுதி- II: பதினெண்கீழ்க்கணக்கு:

2.1.1 திருக்குறள்

2.1.2 நாலடியார் முதலிய அற நூல்கள்

3.1.3 அக, புற இலக்கியங்கள்

பகுதி- III: காப்பியங்கள் :

3.1.1 பெருங்காப்பியங்கள் :
சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந் தாமணி, கம்பராமயணம், பெரியபுராணம், பெருங்கதை, சீறாப்புராணம், தேம்பாவணி, பாரதம், இராமாயணம், பிற இந்திய மொழிகளில் பாரதம், இராமாயணம் பற்றிய குறிப்புகள்.

3.1.2 சிறுகாப்பியங்கள் :
உதயணகுமார காவியம், நாககுமார காவியம்,யசோதர காவியம், சூளாமணி, நீலகேசி.

பகுதி- IV: பக்தி இலக்கியங்களும் சிற்றிலக்கியங்களும்:

4.1.1 முற்காலப் பக்தி இலக்கியங்கள்:

தேவாரம், திருவாசகம், பிற பன்னிருதிருமுறை நூல்கள், திவ்வியப் பிரபந்தம். பிற இந்திய மொழிகளில் பக்தி இலக்கியங்கள்

4.1.2 பிற்காலப் பக்தி இலக்கியங்கள்:

குமரகுருபரர், அருணகிரிநாதர், தாயுமாணவர், வள்ளலார்

4.1.3 சிற்றலக்கியங்கள்:

கோவை, பரணி, பிள்ளைத்தமிழ், தூது, பள்ளு, குறவஞ்சி, திருக்கோவையார், கலிங்கத்துப் பரணி, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், தமிழ்விடு தூது, முக்கூடற், பள்ளு, திருக்குறறாலக் குறவஞ்சி; இந்திய மொழிகளில் அமைந்த சிற்றிலக்கியங்கள், கண்ட காவியம், சந்தேசம், சதகம்.

பகுதி- V: இக்கால இலக்கியங்கள் I:

5.1.1 கவிதை:

பாரதியார், பாரதிதாசன், கவிமணி, நாமக்கல் கவிஞர், கண்ணதாசன், சுரதா.

5.1.2 புதுக்கவிதை:

ந. பிச்சமூர்த்தி, நா. காமராசன், மீரா, அப்துல் ரகுமான், சிற்பி, மு. மேத்தா, வைரமுத்து.

5.1.3 ஐக்கூ கவிதை:

5.1.4 நாடகம் :

5.1.4.1 பழைய நாடகங்கள் :

மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை, சங்கரதாஸ் சுவாமிகள், பம்மல் சம்பந்த முதலியார், ஆ.பழநி.

5.1.4.2 புதிய நாடகங்கள்:

அண்ணா, பி.எஸ். இராமையா, கலைஞர் மு. கருணாநிதி

5.1.4.3 அண்மை நாடகங்கள்:

இந்திரா பார்த்தசாரதி, ந. முத்துசாமி, சே. இராமானுஜம், மு. இராமசாமி, இன்குலாப்

பகுதி VI : இக்கால இலக்கியங்கள் II :

6.1.1 சிறுகதை:

வ.வே.சு. அய்யர், புதுமைப்பித்தன், கு.ப. ராஜகோபாலன், கு. அழகிரிசாமி, ஜெயகாந்தன், அசோகமித்திரன், வண்ணதாசன், மேலாண்மை பொன்னுசாமி, அம்பை

6.1.2 நாவல்:

மாயூரம் வேதநாயகம் பிள்ளை, கல்கி, ஆர். சண்முகசுந்தரம், மு. வரதராசன், தி. ஜானகிராமன், ராஜம் கிருஷ்ணன், சுந்தர ராமசாமி, கி.ராஜநாராயணன், சிவகாமி, இமயம்.

6.1.3 கட்டுரைகள்:

மறைமலையடிகள், வ.ரா., திரு.வி.க., ரா.பி.சேதுப்பிள்ளை, மயிலை சீனி, வேங்கடசாமி, வெ. சாமிநாத சர்மா, வா.செ. குழந்தைசாமி.

6.1.4 தன் வரலாறு:

வ.உ.சி., உ.வே.சாமிநாதையர், திரு.வி.க., நாமக்கல் கவிஞர், நெ.து. சுந்தரவடவேலு, அப்துல் கலாம்.

6.1.5 வாழ்க்கை வரலாறு :

மகாகவி பாரதியார் (வ.ரா), புதுமைப்பித்தன் வரலாறு (ரகுநாதன்), பொன்னியின் செல்வன் (சுந்தா), இராமானுசர் வரலாறு (சிற்பி), குன்றக்குடி அடிகளார் (பொன்னீலன்).

6.1.6 பயண இலக்கியம் :

ஏ.கே.செட்டியார், சோமலெ, சி.சுப்பிரமணியம், மணியன்

6.1.7 மொழிபெயர்ப்பு இலக்கியம்:

6.1.7.1 பிறமொழிகளில் இருந்து தமிழுக்கு:
சுத்தானந்த பாரதி, கா.ஸ்ரீ.ஸ்ரீ, த.நா. குமாரசாமி, சி.ஏ பாலன், சரஸ்வதி ராம்நாத், தி. ப. சித்தலிங்கையா, மு.கு.ஜகந்நாதராஜா.

6.1.7.2 தமிழில் இருந்து பிற மொழிகளுக்கு:
ஏ.கே. இராமானுஜன், கா. செல்லப்பன்.

6.1.7.3 தமிழ், இந்திய மொழிகளில் புத்திலக்கிய வரவு:
உரைநடை, நாவல், சிறுகதை, நாடகம், புதுக்கவிதை, செய்தித்தாள் ஆகியவற்றின் தோற்றமும் வளர்ச்சியும்.

பகுதி VII: வாய்மொழி இலக்கியம்:

7.1.1 கதை, பாடல், கதைப்பாடல்

7.1.2 பழமொழி, விடுகதை

பகுதி VIII: தமிழ் இலக்கணங்கள்:

8.1.1 அறுவகை (எழுத்து, சொல், அகப்பொருள்,புறப்பொருள், யாப்பு, அணி) இலக்கணக் கொட்பாடுகள்

8.1.1.2 எழுத்து (தொல்காப்பியம், நன்னூல்)

8.1.1.3 சொல் (தொல்காப்பியம், நன்னூல்)

பகுதி IX:

9.1.1 அகப்பொருள் (தொல்காப்பியம், இறையனார் அகப்பொருள், நம்பியகப் பொருள்)

9.1.2 புறப்பொருள் (தொல்காப்பியம், புறப்பொருள் வெண்பா மாலை)

9.1.3 யாப்பு (யாப்பருங்கலக் காரிகை)

9.1.4 அணி (தண்டியலங்காரம்)

பகுதி X: இலக்கியத் திறனாய்வு:

10.1.1 ஆ. முத்துசிவன், எஸ், வையாபுரிப் பிள்ளை, தெ.பொ. மீனாட்சிசுந்தரம், மு.வரதராசன், அ.ச.ஞானசம்பந்தன், நா.வானமாமலை,க.கைலாசபதி, கா.சிவத்தம்பி, க.நா. சுப்பிரமணியன், சி.சு.செல்லப்பா, வ.சு.ப. மாணக்கம்.

10.1.2 தமிழ், பிற இந்திய மொழிகளின் திறனாய்வு அணுகுமுறைகள், இலக்கிய வகைமைகள்

## தாள்-III (பகுதி-ஆ)

## ( அருந்துணைப் பாடங்கள் )

அருந்துணைப் பாடம் - I: காலந்தோறும் இலக்கியம்

1.1 சங்க அக இலக்கியங்கள்

1.2 சங்கப் புற இலக்கியங்கள்

1.3 திருக்குறள்

1.4 நீதி நூல்கள்

1.5 காப்பியங்கள்

1.6 பக்தி இலக்கியம்: தேவாரம், திருவாசகம், பிற பன்னிரு திருமுறை நூல்கள், திவ்வியப் பிரபந்தம்.

1.7 சித்தர் பாடல்கள்

1.8 சிற்றிலக்கிய வகைகள்:
அந்தாதி, உலா, கோவை, கலம்பகம், பிள்ளைத்தமிழ், சதகம், தூது, பரணி, குறவஞ்சி, பள்ளு.

1.9 பிற்காலப் பக்தி இலக்கியங்கள்:
குமரகுருபரர், அருணகிரிநாதர், தாயுமானவர், இராமலிங்க அடிகளார்.

1.10 இலக்கிய உரையாசிரியர்கள் :

அடியார்க்கு நல்லார், பரிமேலழகர், நச்சினார்க்கினியர், புலவர் குழந்தை, ஔவை துரைசாமி பிள்ளை, சிவக்கவிமணி சுப்பிரமணிய முதலியார்.

அருந்துணைப் பாடம் - II : காலந்தோறும் இலக்கணம்

2.1 தொல்காப்பியம்

2.2 எழுத்திலக்கணமும் எழுத்திலக்கணக் கோட்பாடும்

2.3 சொல்லிலக்கணமும் சொல்லிலக்கணக் கோட்பாடும்

2.4 அகப்பொருளிலக்கணமும் அகப்பொருள் இலக்கணக் கோட்பாடும்

2.5 புறப்பொருள் இலக்கணமும் புறப்பொருள் இலக்கணக் கோட்பாடும்

2.6 யாப்பிலக்கணமும் யாப்பிலக்கணக் கோட்பாடும்

2.7 அணியிலக்கணமும் அணியிலக்கணக் கோட்பாடும்

2.8 இலக்கண உரைக் கோட்பாடுகள்:

இளம்பூரணர், பேராசிரியர், சேனாவரையர், தெய்வச்சிலையார், நச்சினார்க்கியர்,மயிலைநாதர், சிவஞான முனிவர், ஆறுமுக நாவலர்

2.9 நிகண்டுகள், அகராதிகள்

2.10 ஒப்பிலக்கணம் - திராவிட மொழிகள்

அருந்துணைப் பாடம் - III : இக்கால இலக்யமும் திறனாய்வும்

அ. இக்கால இலக்கியம்

3.1 கவிதை - மரபுக் கவிதை, புதுக்கவிதை, ஐக்கூக் கவித

3.2 நாவல்

3.3 சிறுகதை

3.4 நாடகம்

3.5 கட்டுரை, மொழிபெயர்ப்பு இலக்கியம்

ஆ இலக்கியத் திறனாய்வு

3.6 இலக்கியப் படைப்பும் படைப்பாசிரியனும்

3.7 இலக்கிய வகைமைக் கோட்பாடுகள்

3.8 இலக்கிய உருவம், உள்ளடக்கம், உத்தி

3.9 திறனாய்வு அணுகுமுறைகள், இலக்கியக் கொள்கைகள்

3.10 பெண்ணியம், தலித்தியம்

அருந்துணைப் பாடம் - IV : காலந்தோறும் தமிழர் கலையும் பண்பாடும்:

(சங்ககாலம் முதல் இன்று வரை உள்ள ஏட்டிலக்கியங்- களும், நாட்டுப்புற மரபுகளும் கருத்தில் கொள்ளப் பெற வேண்டும்)

4.1 கலை வரையறை

4.2 இசைக் கலையும் ஆடற்கலையும்

4.3 ஓவியக் கலையும் சிற்பக் கலையும்

4.4 கட்டடக் கலை

4.5 பண்பாடு: வரையறை

4.6 பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும்

4.7 உணவு, உடை

4.8 திருவிழாக்களும் விளையாட்டுகளும்

4.9 வழிபாட்டு நெறிகளும் சிந்தனை நெறிகளும்

4.10 அறிவியல் நெறிகள்

## மாதிரி வினாக்கள்

### தாள்-II

1. வீரயுகப் பாடல்கள் என்பவை.

   (A) காப்பியங்கள்

   (B) புறநானூற்றுப் பாடல்கள்

   (C) சிலப்பதிகாரக் காதைகள்

   (D) கம்பராமாயண யுத்த காண்டம்

2. பத்துப்பாட்டு நூல்களில் இடம் பெறுபவை

   (1) மதுரைக் காஞ்சி

   (2) முதுமொழிக் காஞ்சி

   (3) பட்டினப்பாலை

   (4) மலைபடு கடாம்

   கீழே தரப்பட்டுள்ள விடைதெரி குறிப்பிலிருந்து விடையைக் கண்டுபிடிக்கவும்.

   (A) 1ம், 2ம் சரி

   (B) 1ம், 3ம் சரி

   (C) 1ம், 3ம், 4ம் சரி

   (D) 3ம், 4ம் சரி

3. உறுதிக் கூற்று: சிலம்பும் மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள்.

   காரணம் : ஒன்றன் தொடர்ச்சியே மற்றொன்று

   (A) (உ), (கா) இரண்டும் சரி

   (B) (உ) சரி, (கா) சரி அல்ல

   (C) (கா) சரி, (உ) சரி அல்ல

   (D) (உ), (கா) இரண்டும் சரி அல்ல

தாள்-III (பகுதி-அ)

1. பெருங்காப்பியங்களில் ஏதேனும் ஒன்று பற்றிய விளக்கவுரை தருக.

அல்லது

சிற்றிலக்கியங்களில் ஏதேனும் ஒன்று பற்றிய விளக்கவுரை தருக.

தாள்-III (பகுதி-ஆ)

11. பெண்ணியம் இக்கால நாவல்களில் எவ்வாறு சித்தரிக்கப்படுகின்றது என்று திறனாய்வு செய்யவும்.

அல்லது

சங்ககால தமிழர்களின் உணவு, உடை மற்றும் சமூக பழக்க வழக்கங்களும் இக்காலத் தமிழர்களின் வழக்கங்களிலிந்து எவ்வாறு வேறுபடுகிறது என்று திறனாயிந்து ஒரு கட்டுரை வரைக.

* * *